**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.276/2019</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி., பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை வாதிகள் தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.நாகராஜ், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துசாமி | தந்தை பெயர் | : | நடேசன் |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 27.03.2026

**P.W. : 1**

**<u>வாதிகள் தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் 2 ஆம் வாதி ஆவேன். எனது முதல் விசாரணைக்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். 02.06.2016 தேதியில் அருளானந்தம் என்பவர் பொய்யாமொழிக்கு எழுதி வைத்த பதிவு செய்யாத உயில் அசல் லேமினேட் செய்யப்பட்டது **வாசாஆ.1** ஆகும். 20.08.2019 தேதியில் பிரதிவாதிக்கு பொய்யாமொழி சார்பில் அனுப்பப்பட்ட அறிவிப்பின் அலுவலக நகல் **வாசாஆ.2** ஆகும். அதை பிரதிவாதி பெற்றுக்

கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **வாசாஆ.3** ஆகும். மண்ணச்சநல்லூர் வட்டாட்சியருக்கு 01.04.2019 அன்று பொய்யாமொழி அனுப்பிய கடிதம் அலுவலக நகல் **வாசாஆ.4** ஆகும். அதை மண்ணச்சநல்லூர் வட்டாட்சியர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **வாசாஆ.5** ஆகும். 28.06.2019 அன்று மண்ணச்சநல்லூர் வட்டாட்சியருக்கு அனுப்பிய நினைவூட்டுதல் கடிதம் மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டை **வாசாஆ.6 வரிசை** ஆகும்.

**(வேண்டுகோளின்படி முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.